# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை 02 -
# General Certificate of Education (Ord.Level) Examination, 02 -

History I
வரலாறு I

One hour
ஒரு மணித்தியாலம்

கவனிக்க :
(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.

01. கி.பி 4ம் நூற்றாண்டு காலப்பகுதியில் எழுதப்பட்ட இலங்கையின் வரலாற்று நூல்
   1. தீபவம்சம் 2. மகாவம்சம் 3. வம்சத்தபகாசினி 4. சமந்தபாஷாதிகாவ

02. 19 வருடங்களாக இலங்கையின் சிறைக் கைதியாகவிருந்து பின் இலங்கை வரலாறு பற்றி குறிப்பிட்ட ஆங்கிலேயர்
   1. ஜோவாவோ ரிபைரோ 2. பிலிப்பஸ் பொல்தெவுஸ்
   3. றொபட் நொக்ஸ் 4. டீ.குவைரோஸ்

03. காட்டுப் பலாவின் விதைகளை தீயில் சுட்டுச் சாப்பிட்டமைக்கான ஆதாரம் கிடைக்கப்பட்ட இடம்
   1. பெல்லன்பதிபெலஸ்ஸ 2. பாஹியன்கல
   3. பண்டாரவளை சேர்ஹில் 4. கித்துள்கல பெலிலென

04. * நிறந்தீட்டப்பட்ட மடபாண்டம் கண்டுபிடிக்கப்பட்டமை.
   * மண்ணாலான மணி ஒன்று கிடைக்கப்பெற்றமை.
   * வீடொன்றிற்கான அத்திவாரம் கண்டுபிடிக்கப்பட்டமை.
   மேற்கூறப்பட்டுள்ள ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ள இடமாக விளங்குவது
   1. ஹல்துமுல்ல 2. உடரஞ்சாமடம 3. பெரகல 4. இப்பன்கட்டுவ

05. அரசுக்கு முற்பட்ட காலங்களில் பருமகமார் பயன்படுத்தியதாகக் கருதப்படும் கல்லறை மயானம்
   1. உடரஞ்சாமடம 2. பெரகல 3. ஹல்துமுல்ல 4. இப்பன்கட்டுவ

06. வசப மன்னனால் யாழ்ப்பாண இராட்சியத்தின் நிர்வாகத்துக்கென நியமிக்கப்பட்ட அரச நிர்வாகி
   1. சப்புமல்குமார 2. ரிஷிகிரி 3. அம்புலுகுமார 4. காசிநயினார்

07. நீர்ப்பாசனத் தொழிலின் மேம்பாடு காரணமாக **மின்னேரியாத் தெய்வம்** எனப் போற்றப்படும் மன்னன்
   1. மகாசேனன் 2. தாதுசேனன் 3. 1ம் முகலன் 4. நிஸங்கமல்லன்

08. இலங்கை வரலாற்றில் முதலாவது முறையான யுத்த செயற்பாட்டிற்கு தலைமைத்துவம் வழங்கிய மன்னன்
   1. எல்லாளன் 2. 1ம் விஜயபாகு 3. காசியப்பன் 4. துட்டகைமுனு

09. தேவநம்பியதிஸ்ஸ மன்னனுக்குப் பின்னர் அரசுரிமை பெற்ற அவனது சகோதரர்களை முறையே குறிக்கும் விடைத்தொகுதி
   1. சத்தாதிஸ, கல்லாடநாக, தூலத்தன, வலகம்பா
   2. உத்திய, மஹாசிவ, சூரதிஸ அசேல
   3. மகாநாக, யடலாலயதிஸ, காவந்திஸ
   4. இத்திய, உத்திய, பத்தசால, சுமண

10. கனிட்டதிஸனால் உரோமாபுரிக்கு தூதுவர்களை அனுப்பி கண்ணாடி மணிகளைப் பெற்று வந்து பூசைசெய்ய முற்பட்ட விகாரை
   1. தூபராம   2. ஜேத்தவன   3. ருவன்வெலி   4. மிரிசவெட்டிய

11. தலதா மாளிகையின் பாதுகாப்பை வேலைக்காரப் படையிடம் ஒப்படைத்த இலங்கை மன்னன்
   1. 1ம் விஜயபாகு   2. அபயநாக   3. இளநாக   4. துட்டகைமுனு

12. பல மண்படைகளாலும் அழுத்தப்பட்டு உறுதியான அணைக்கட்டைக் கொண்டிருந்த குளக்கட்டு எது?
   1. இராட்சத குளக்கட்டு   2. மின்னேரிய குளக்கட்டு
   3. பராக்கிரமசமுத்திர குளக்கட்டு   4. சீகிரிய குளக்கட்டு

13. மாடுகளின் பாதுகாப்பிற்காகவும், விவசாய நடவடிக்கைகளின் வெற்றிக்காகவும் செய்யப்பட்ட பால்மடு யாகம் எத்தெய்வத்தை முன்னிலைப்படுத்தப்பட்டது?
   1. உபுல்லவ   2. மங்கர   3. சக்க   4. அக்கினி

14. திஸ்ஸ எனும் விகாரைக்கு எட்டுக் கரீசை நிலம் தானமாக வழங்கப்பட்டதாக குறிப்பிடும் கல்வெட்டைப் பொறிப்பித்த மன்னன்
   1. குட்டகண்ணாபய   2. 4ம் மகிந்தன்   3. 3ம் உதயன்   4. 5ம் சேனன்

15. 1ம் விஜயபாகுவுக்கு துன்பம் ஏற்பட்டபோது தண்டநாயக்க சித்தாரும்பி புத்தநாயக்க உதவி வழங்கியமை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு
   1. வல்லிபுரம் பொன்னேடு   2. வெஸ்ஸகிரி கல்வெட்டு
   3. பனாக்கடுவ செப்பேடு   4. ஹோரபிற்றிகமுவ கல்வெட்டு

16. சூழல் முகாமைத்துவம் தொடர்பாக நிரல் Iல் சட்டங்களும் நிரல் IIல் கல்வெட்டுக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றை சரியாக இணைக்கும் போது அமையும் விடைத்தொகுதி

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. உயர்நிலங்களிலுள்ள மரங்களை வெட்டக்கூடாது | A - மிகிந்தலைக் கல்வெட்டு |
| 2. காட்டுமரங்களை வெட்ட வேண்டாம் | B - புத்தன்னேஹெல கல்வெட்டு |
| 3. மரஞ்செடிகளின் முகாமைத்துவம் | C - அனுராதபுரக் கல்வெட்டு |
| 4. பசு, எருமை, ஆடு என்பவற்றைக் கொல்வோருக்கு மரணதண்டனை | D - கொண்ட வட்டவான் கல்வெட்டு |

   1. CBDA   2. BDCA   3. DCBA   4. CADB

17. இலங்கையில் ஆட்சிபுரிந்த பெண் அரசிகளின் தொகுதி
   1. லீலாவதி, அசோகமாலா   2. சுமண, கல்யாணவதி
   3. லீலாவதி, கல்யாணவதி   4. விகாரமாதேவி, திரிலோகசுந்தரி

18. தேவேந்திரமுனை ஆலயத்துக்கு காணிக்கைகளை வழங்கிய சீனத்தளபதி
   1. செங்ஹோ   2. யுங்லோ   3. இத்சிங்   4. பாஹியன்

19. 6ம் பராக்கிரமபாகு மன்னனால் தன் தாயின் நினைவாக அமைக்கப்பட்ட பிரிவெனா
   1. பத்மாவதி பிரிவெனா   2. இருகல் குலதிலக பிரிவெனா
   3. வீதாகம சணானந்த பிரிவெனா   4. சுனேந்திராதேவி பிரிவெனா

20. 1ம் இராஜசிங்கன் கண்டி இராட்சியத்தைக் கைப்பற்ற உதவிய கண்டிப் படைத்தளபதி
   1. கொனப்புபண்டார   2. காலியத்தபண்டார   3. விதியபண்டார   4. வீரசுந்தரபண்டார

21. பிரதானிகளின் கட்டளைகளை பிராந்திய அதிகாரிகளுக்குக் கொண்டு சென்றவர்கள்
   1. பள்ளேகம்பா   2. கடுபுள்ளே   3. உடகம்பா   4. கஜநாயக்க

22. 'எல்லாவற்றையும் விட மனிதன் மேலானவன்' எனும் கொள்கையானது
1. பயனுடைவாதம் 2. முதலாளித்துவவாதம் 3. தாராண்மைவாதம் 4. மானிடவாதம்

23. முதன்முதலில் கைத்தொழில் துறையில் அதிகளவு வளர்ச்சி கண்ட ஆசிய நாடு
1. ஜப்பான் 2. சீனா 3. இந்தியா 4. கொரியா

24. இந்தியாவிற்கு முதன் முதலில் ஆங்கிலேயர் வந்தபோது இந்தியாவிலிருந்த ஆட்சியாளன்
1. ஜவகர்லால்நேரு 2. மோதிலால்நேரு 3. ஜஹாங்கீர் 4. மகாத்மாகாந்தி

* பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் I வரையான தகவல்களைப் பயன்படுத்தி 25ம், 26ம், 27ம் வினாக்களுக்கு விடை தருக.

| ஆண்டுகள் | நபர்கள் | சம்பவங்கள் |
|---|---|---|
| A. 1776 | D. ஜோர்ஜ்வாஷிங்டன் | G. பிரநிதித்துவம் இல்லையேல் வரியுமில்லை |
| B. 1789 | E. மொண்டெஸ்கியூ | H. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் |
| C. 1769 | F. றிச்சட் ஆக்ரைட் | I. நீர் வெளியேற்றம் |

25. அமெரிக்க சுதந்திரப் புரட்சியுடன் தொடர்புடைய தகவல்களின் விடைத்தொகுதி
1. A F G 2. B F G 3. A D G 4. C D H

26. பிரான்சியப் புரட்சியுடன் தொடர்புடைய சம்பவங்களின் விடைத்தொகுதி
1. B F H 2. C E H 3. A D G 4. B E H

27. கைத்தொழிற் புரட்சியுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளின் விடைத்தொகுதி
1. C F I 2. B F G 3. C D H 4. A D I

28. நோர்த்தின் கண்டிப் படையெடுப்பின் போது கொழும்பிலிருந்து கண்டிக்கு படையெடுத்துச் சென்றவர்
1. பாபட் 2. மெக்டுவல் 3. எட்வேட்பாண்ஸ் 4. அண்ட்ருஸ்

29. 1818 கலகத்தின் இறுதியில் ஆங்கிலேயரால் சிரச்சேதம் செய்யப்பட்ட கலகத் தலைவன்
1. பிலிமத்தலாவ 2. ரட்டேரால 3. கலகெதரமொஹட்டால 4. மடுகல்லே

30. இலங்கையில் 1862ல் அச்சகம் ஒன்றை நிறுவுவதற்காக சுமணதிஸ்ஸ தேரர் உதவி நாடிய நாடு
1. பர்மா 2. சீயம் 3. இந்தியா 4. சீனா

31. 'கோல்புறூக்கமரன் யாப்பு சீர்திருத்தப்பட வேண்டும்' என பிரித்தானிய குடியேற்றச் செயலாளரிடம் மனு ஒன்றினைக் கையளித்த அரசியலாளர்
1. ஜேம்ஸ் பீரிஸ் 2. சேர்.பொன். அருணாசலம்
3. சேர்.பொன். இராமநாதன் 4. வில்லியம் கோபல்லாவ

32. இலங்கையில் முதன்முதலில் தேயிலைத் தோட்டம் ஆரம்பிக்கப்பட்ட இடம்
1. தலவாக்கல 2. லுனுவில 3. லூல்கந்துர 4. கண்ணொருவ

33. இலங்கைத் தோட்டத் தொழிலாளர் இயக்கத்தை ஆரம்பித்தவர்
1. கொல்வின் ஆர்.டி.சில்வா 2. ஏ.ஈ. குணசிங்க
3. கோ. நடேசஐயர் 4. என்.எம். பெரேரா

34. இலங்கையில் ஆளுநர் பதவிக்குப் பதிலாக ஆளுநர் நாயகம் பதவியை அறிமுகப்படுத்திய யாப்பு
1. சோல்பரி யாப்பு 2. டொனமூர் யாப்பு
3. 1972ம் ஆண்டு யாப்பு 4. 1948ம் ஆண்டு யாப்பு

35. இலங்கையில் அடுத்தடுத்து இரண்டு தடவைகள் முதன்முதலில் பிரதமர் பதவி வகித்தவர்
    1. டி.எஸ். சேனாநாயக்க
    2. டட்லி சேனாநாயக்க
    3. ஜோன் கொத்தலாவ
    4. எஸ்.டபிள்யு.ஆர்.டீ. பண்டாரநாயக்க

36. பிரான்சியப் புரட்சியைத் தொடர்ந்து பிரான்சில் புதிய அரசியல் நிலைமையினை உருவாக்கி வைத்தவன்
    1. நெப்போலியன் பொனப்பாட்
    2. மொண்டெஸ்கியூ
    2. 16ம் லூயி
    4. வோல்ரெயர்

* இலங்கையில் யாப்புச் சீர்திருத்தம் தொடர்பாக கீழே சில விடயங்கள் தரப்பட்டுள்ளன இவற்றை அடிப்படையாகக் கொண்டு 37ம், 38ம் வினாக்களுக்கு விடையளிக்க.

A - தேசிய அரசுப் பேர்வை
B - ஆளுநர்
C - விகிதாசாரப் பிரதிநிதித்துவம்
D - பேரளவு ஜனாதிபதி
E - பொதுசன வாக்குகளால் ஜனாதிபதித் தெரிவு
F - இருசபைப் பாராளுமன்றம்

37. 1948ம் ஆண்டு யாப்பின் இரு இயல்புகளைக் குறித்து நிற்கும் விடைத்தொகுதி
    1. Bயும், Fஉம்
    2. Aயும், Dயும்
    3. Aயும், Bயும்
    4. Bயும், Cயும்

38. இரண்டாம் குடியரசு யாப்பின் இரு இயல்புகளைக் குறித்து நிற்கும் விடைத்தொகுதி
    1. Aயும், Bஉம்
    2. Bயும், Cயும்
    3. Bயும், Dயும்
    4. Cயும், Eயும்

39. "ஆயுத பலத்தால் 5 வருடங்களில் பெற்றவைகளைப் பாதுகாக்க மேலும் 50 வருடங்கள் ஆயுதம் தரித்த நிலையில் இருக்க வேண்டிவரும்." என கூறிய ஜேர்மனியர்
    1. பிஸ்மார்க்
    2. வொன்வோல்கே
    3. ஹிட்லர்
    4. ஹிண்டன்பேர்க்

40. வீட்டோ அதிகாரத்தை உடைய நாடுகள் அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சபை
    1. பாதுகாப்புச்சபை
    2. பொருளாதார சமூகசபை
    3. பொதுச்சபை
    4. பொதுச்செயலகம்

***